## வாக்குமூலம்
## தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.
## வழக்கு எண் : SC.No. 401/2024
## வழக்கு சாட்சி PW-7

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மருத்துவர்.ராஜலட்சுமி | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | ஆசைத்தம்பி | தொழில் | : | மருத்துவர் |
| கிராமம் | : | தென்காசி | வயது | : | 39 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of September 16th, 2025.

**(எதிரி ஆஜர் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் தற்போது தென்காசி அரசு தலைமை மருத்துவமனையில் மூத்த உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 21.05.2023 அன்று தென்காசி அரசு மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் பணியில் இருந்தபோது, அன்றைய தினம் காலை 10.30 மணியளவில் திப்பணம்பட்டியைச் சார்ந்த 34 வயதுடைய மாரியப்பன் என்பவர் 108 ஆம்புலன்ஸ் மூலமாக என்னிடம் சிகிச்சைக்கு கொண்டு வரப்பட்டார். அவரை நான் விசாரித்தபோது, அன்றைய தினம் காலை 09.30 மணிக்கு பாவூர்சத்திரம் மெயின் ரோட்டின் அருகே அவரது இருசக்கரவாகனத்தின் அருகே நின்று கொண்டிருந்த போது, அந்த வழியாக வந்த லோடு லாரி இடித்து காயம் ஏற்பட்டதாக கூறினார்.

அவரை நான் பரிசோதனை செய்தபோது, அவர் சுயநினைவுடன் இருந்தார். நடு முதுகு மற்றும் வலது தொடையில் வலி இருப்பதாக கூறினார். வெளிக்காயம் எதுவும் இல்லை. அவரை நான் அவசர

சிகிச்சைப்பிரிவில் உள்நோயாளியாக அனுமதித்து எக்ஸ்–ரே எடுக்கும்படி அறிவுறுத்தினேன். அவருக்கு எக்ஸ்–ரே எடுக்கப்பட்டது. அதில் அவருக்கு எலும்பு முறிவு எதுவும் காணப்படவில்லை. அவர் மறுநாள் 22.05.2023 அன்று மருத்துவமனையில் இருந்து விடுவிக்கப்பட்டார். அவருக்கு ஏற்பட்ட காயங்கள் சிறு காயங்கள் என சான்று வழங்கினேன். அந்த காயச்சான்று அ.சா.ஆ.4 ஆகும். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

காயம்பட்டவர் மருத்துவ நமூனா கொண்டு வரவில்லை என்றால் சரிதான். லாரியின் பதிவெண் சொல்லவில்லை. ஆய்வாளர் என்னை விசாரிக்கும் போது, நீதிமன்றத்தில் சொல்லியுள்ளவாறு தான் சொல்லியுள்ளேன். காயம்பட்டவர் வலி இருப்பதாக கூறியது பொய்யாக கூட இருக்கலாம் என்றால் சரிதான். ஆனால், நான் பார்த்தபோது தொடுவலி இருந்தது. அந்த தொடுவலியானது என்னிடம் சிகிச்சைக்கு வருவதற்கு முன்பு, அந்த நபர் வேறு ஒரு நபரை தாக்கும் போது கீழே விழுந்தால் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான்.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.09.17 18:48:12 +0530